Registered as a Newspaper    பக்கங்கள் 4    விலை ரூபா 5-00

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

ஈழநாதம்
Eelanaatham    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 5    திருவள்ளுவர் ஆண்டு 2025    சித்திரை 2?    05 5 94    வியாழக்கிழமை    ஓசை 76

## ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் ஆகஸ்ட் 7- இல் பரீட்சை

இந்த ஆண்டு முதல் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ஆகஸ்ட் மாதத்தில் நடத்தப்பட்டு நவம்பர் மாத முடிவுக்கு முன்பாக பெறுபேறுகள் வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் கூறியுள்ளன. இந்த ஆண்டில் ஆ ஸ்ட் ஏழாம் திகதியன்று இப் பரீட்சை ந த்தப்படும் என்றும் பரீட்சை விடைத்தாள்கள் செப்டம்பர் மாத முடிவில் திருத்தப்படும் என்றும் அக்டோபர் மாதத்தில் பெறுபேறுகள் திணைக்களத்தில் திரட்டப்பட்டு நவம்பர் மாதத்தில் பெறுபேறுகள் வெளியிடப்படும் என்றும் மேலும் கூறப்படுகின்றது. இதன் மூலமாக 1995-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பாடசாலை (4 ஆம் பக்கம் பார்க்க)

# லெப். ஜெனரல் லக்கி அல்கம குறித்து ஜனாதிபதி விஜேதுங்கா எச்சரிக்கை

## சுங்கப்பகுதி கடும் சோதனை

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு எடுத்துவரப் படும் பொருள்கள் அனைத்தும் கொழும்பு துறைமுகத்தில் வைத்து சுங்கப் பகுதியினரால் கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றது.

கொழும்பு துறை முகத்திலிருந்து வடபகுதிக்கு வரும் கப்பல்களில் ஏற்றப்படும் சகல பொருட்களும் பாதுகாப்புப் படையின்பல்வேறு பிரிவுகளாலும் தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்படுவது தெரிந்ததே.

(தி ,ச)

## காமினி விஜேசேகர உத்தியோகபூர்வ நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் புதிய பொதுச் செயலாளராக நிர்வாக உறுப்பினர் காமினி விஜேசேகர நியமிக்கப்பட்டுள்ளார். அரசியலிலும் பொதுத்துறையிலும் நீண்ட கால தொடர்பு கொண்ட டாக்டர் காமினி விஜேசேகர ருக்மன் சேனநாயக்காவின் எச்சுத் லங்கா ஜாதிக பெர முனவில் இணைந்து செயற் பட்டவராவார் இவர் 1983 இல் மகரகம தொகுதிக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனாவை எதிர்த்துப் போட்டியிட்டவராவார். தற்போது கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையின் உப தலைவ (4ஆம் பக்கம் பார்க்க)

## தப்பியோடிய ராணுவத்தின் தகவல் திரட்டப் பணிப்பு

(கொழும்பு)

அண்மையில் எடுக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கடந்த ஐந்து வருடங்களில் இராணுவத்தை சேர்ந்த பன்னிரண்டாயிரத்திற்கு குறையாதவர்கள் இராணுவத்தை விட்டு தப்பியோடியிருப்பதாக தெரிய வந்துள்ளது.

இவர்களில் அனேகர் கடமை நேரத்தில் தப்பியோடி இருப்பதாலும் இவர்கள் தொடர்பாக முழு விபரத்தையும் கண்டுபிடிக்குமாறு உடனடியாக கட்டளை இடப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இதேவேளை இவ்வளவு தொகையானவர் இராணுவத்தை விட்டு தப்பியோடுவதற்கான காரணங்களைக் கண்டறியுமாறும் இதன்மூலம் மட்டுமே எதிர் காலத்தில் இப் பிரச்சினையைக் குறைக்கலாம் என இராணுவ தளபதி சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளார்.

## கப்பல் பயணிகளிடம்

## அவதானமாக இருக்க தளபதிகளுக்கு பணிப்பு

(கொழும்பு)

**சிறிலங்காவின் முப்படைகளையும் பொலிஸாரையும் உசார் நிலையில் இருக்குமாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பணித்துள்ளார் அத்தோடு அமைச்சர் சிறிசேன கூரே, இராணுவ தலைமை அதிகாரி லெப் ஜெனரல் லக்கி அல்கம மீது போதிய அவதானமாக இருக்குமாறும் ஜனாதிபதி டி பி விஜேதுங்கா பணித்துள்ளதாக 'ராவய' பத்திரிகை தெரிவித்துள்ளது**

இதுபற்றி மேலும் அப் பத்திரிகை தெரிவிக்கையில், திட்டமிடப்பட்ட சதி முயற்சி தொடர்பாக விசேட பாதுகாப்பு ஒழுங்கமைப்பு குழு மேலும் விசாரணைகளைமேற்கொண்டுவருவதாகவும் கிடைத்த தகவல்களை ஜனாதிபதிக்கு இவ் ஒழுங்கமைப்பு குழு வழங்கி வருகின்றது எனவும் ஜனாதிபதி இது தொடர்பாக முழுத் தகவல்களையும் உயர் அதிகாரிகளுக்கு அவ்வப்போது வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா மே மாதம் 8-ம் திகதி மக்கள் சீனக்குடியரசுக்கு அரச பயணம் மேற்கொள்ள இருந்ததாகவும், ஜனாதிபதியை பதவிகவிழ்ப்பதற்கான சதிதிட்டம் அம்பலமானவுடன் சீனாவுக்கான உத்தியோகபூர்வ அரசபயணத்தை கைவிட்டார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்து சீனாவில் உள்ள சிறிலங்கா தூதுவருக்கு தகவல் அனுப்பியுள்ள ஜனாதிபதி நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் தான் இருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் தான் இல்லாத சமயத்தில் சதித் திட்டம் வெற்றியளிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

சுமார் ஒருமாத காலத்திற்கு முன்னதாகவே ஜனாதிபதியை பதவி கவிழ்க்கும் சதி திட்டம் தீட்டப்பட்டுவந்துள்ளதாகவும் இதற்காக சிறிசேன கூரே லெப். ஜெனரல் லக்கி அல்கம ஆகியோர் பல இடங்களில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், ஆட்சியை கைப்பற்றும் நோக்குடனே இச்சதித்திட்டம் தீட்டப்பட்டதாக உறுதி செய்யப்பட்டுள்ள (4 ஆம் பக்கம் பார்க்க)

## மண்ணெண்ணெயுடன் 'மாகோ'

(வட மராட்சி)

கொழும்பில் இருந்து மண்ணெண்ணெய் பரல்களை ஏற்றிக் கொண்டு புறப்பட்ட 'மாகோ' கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேரும் (யோ)

## ஊக்குவிப்பு கொடுப்பனவு

(நல்லூர்)

ஊக்குவிப்புக் கொடுப்பனவுப் பணம்பெறத் தவறிய ஆசிரியர்களுக்கும், கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது- சம்பந்தப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிகோத்தாவில் கூரே பிரியாவிடை பெற்றார்

(கொழும்பு)

கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து இராஜி

விக்கிரம பெரேராவுடன் சிறிகோத்தாவிற்குசென்ற அமைச்சர் சிறிசேனகூரே ஊழியர்கள்

## இரு அமைச்சர்கள், 7பா. உ .கள் மீது ஐ. தே. க. தலைமை நடவடிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டை மீறியதற்காக முக்கிய அமைச்சர் இருவர் மீதும் மேலும் ஏழு பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதும் ...தைச் சேர்ந்த அமைச்சரும், ரத்னபுர பகுதி உறுப்பினர் மற்றும் கம்பஹா மாவட்ட இராஜாங்க அமைச்சர், அதே மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், களுத்துறை பாந்தோட்ட மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உள்ளடங்குவது குறிப்பிடத்தக்கது-

இவர்களை பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்

கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ள வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரே கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவிற்கு சென்று அங்கிருந்த ஊழியர்கள், மற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிரியாவிடை பெற்றுக் கொண்டார்

வடமேல் மாகாண முன்னாள் முதல்வர் காமினி ஜய கோத்தாவிற்குசென்ற அமைச்சர் சிறிசேனகூரே ஊழியர்கள் மத்தியில் உரையாற்றியபோது பொதுச்செயலாளர் பதவியை வகித்தபோது தமக்கு வழங்கிய ஒத்துழைப்பிற்காக அனைவருக்கும் நன்றி பாராட்டினார்.

அத்துடன் கடந்த ஒரு வருடத்திற்குமுன்பே பொதுச் செயலாளர் பதவியைத் துறக்க தான் முன்வந்ததாகவும்,

(4ஆம் பக்கம் பார்க்க)

மன்ற உறுப்பினர்கள் மீதும் கட்சித் தலைமைப் பீடம் நடவடிக்கை எடுக்க இருப்பதாக 'லங்கா தீப' பத்திரிகை தெரிவித்துள்ளது-

கட்சியின் தலைவருக்கு கீழ்ப்படியாது பகிரங்கமாக கட்சியை எதிர்த்து கட்சிக்குள் தமக்குச் சாதகமான குழுக்களை அமைத்து கட்சியைப் பிளவு படுத்த முற்பட்டவர்களுக்கு எதிரகவே இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக ஐ-தே-க- சிரேஷ்ட உறுப்பினர் தெரிவித்துள்ளர்-

இதே வேளை இவர்களிற் சிலர் ஜனாதிபதியினால் அழைக்கப்பட்டு தமது பதவிகளிலிருந்து விலகுமாறு நேரடியாக வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகவும் ஆனல் அவர்கள் இதற்கு இணங்க மறுப்பதாகவும் அவ் உறுப்பினர் மேலும் தெரிவித்துள்ளார்-

இதனுள் மத்தியமாகாணத்

உறுப்பினர், களுத்துறை மாவட்ட இராஜாங்க அமைச்சர், மாத்தறை, காலி, அம்

உறுப்பினர் பதவியில் இருந்தும் கட்சி உறுப்பினர் பதவி

(4ஆம் பக்கம் பார்க்க)

# கப்பல் பயணிகளிடம் தொடரும் பொருள் பறிப்பு

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலை துறைமுகத்திலிருந்து வடபகுதி நோக்கி வருவதற்கு அனுமதி பெற்ற கப்பற் பயணிகளின் பொருள்கள் பல கடற்படையினரல் கைப்பற்றப்பட்டன.

பயணிகள் எடுத்துவந்த சிறியளவிலான பொருள்கள் கூட கைப்பற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

மருந்துக் குளிசைகள், பேனா, ரொபி, பிஸ்கட், சப்பாத்து மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவால் தடை செய்யப்படாத பொருள்கள் யாவற்

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஏழு நாட்களின் பின்வந்த அவசரச் செய்தி

(நமது நிருபர்)

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினூடாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள உறவினருக்கு அனுப்பிய அவசர செய்தி ஒன்று ஏழு நாட்களின் பின் அனுப்பியவரே நேரில் பெற்றுக் கொண்ட சம்பவம் ஒன்று அண்மையில் நடைபெற்றுள்ளது

இச் சம்பவம்பற்றி தெரிய வருவதாவது, கடந்த 23ஆம் திகதி ஒருவர் கொழும்பிலிருந்து மரணச்சடங்கு தொடர்பான அவசர செய்தி ஒன்றை இணுவிலில் உள்ள உறவினருக்கு உலக மனித நேய ஸ்தாபனம் ஒன்றினூடாக அனுப்பியுள்ளார்.

இச்செய்தி அன்றைய தினமே யாழ். கிளைக்கு கிடைத்த போதிலும் அன்

(4ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தின் திட்டம் புலிகளுக்கு கிடைத்ததாம்

[கொழும்பு]

வடபகுதியில் நடத்த இருந்த இராணுவ நடவடிக்கை விபரம் விடுதலைப் புலிகளிடம் கிடைக்கப் பெற்றுள்ளதாக இராணுவ சிரேஷ்ட அதிகாரி கவலை தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட அதிகாரிகளை மட்டும் கொண்டு ஆராயப்பட்ட விடயம் தொடர்பாக எவ்வாறு விடுதலைப் புலிகளுக்கு தகவல் கிடைக்கப் பெற்றது என்பது ஆராயப்பட வேண்டுமென்றும் இதுபோன்ற நிலைதொடர்ந்தால் இதன் பின்னணி மிக ஆபத்தானதாக இருக்கும்எனவும் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தீவிரமாக ஆராயப்பட வேண்டும் என்றும் இதுவே இன்று முக்கியமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

## மா. உ. பதவியிலிருந்து நீக்கினால்

# ஜனாதிபதிக்கு எதிராக நீதிமன்றம் செல்வோம்

## -ஐ. தே. க. தேசியப் பட்டியல் உறுப்பினர்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து தம்மை விலக்க ஜனாதிபதியால் முடியாது எனவும் அவ்வாறு அவர் பதவி விலக்சல் கடிதம் அனுப்பினால் தாம் நீதிமன்றம் செல்லவுள்ளதாகவும் ஐ தே-க வின் தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தனர்-

செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அவர்கள் வழங்கிய பேட்டியொன்றில் இவ்வாறு தெரிவித்த அவர்கள் தாம் ஒருபோதும் உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்யப்போவதில்லை என உறுதியாக கூறினர்-

## தடுத்து வைக்கப்பட்டிருப்போர் விபரம்

# ஐ.நா மனிதஉரிமைஅமைப்பு பெற்றோரிடம் கோருகிறது

(கொழும்பு)

சிறிலங்கா அரசினால் மூன்று வருடங்களுக்கும் மேலாக தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் விபரங்களைத் தருமாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமை அமைப்பு காணாமற்போன பிள்ளைகளைப் பெற்றோரின் அமைப்பிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது

ஐக்கிய நடுகளின் மனித உரிமை அமைப்பின் தடுப்புகாவலில் உள்ளோர் தொடர்

4ஆம் பக்கம் பார்க்க)

# லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பதவி துறப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள லேக்ஹவுஸ் எனப்படும் அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தின் தலைவர் பதவியிலிருந்து சுனில் றொட்றிக்கோ விலகியுள்ளார்-

ஜனாதிபதி டி பி விஜேதுங்காவை சந்தித்துப் பேசிய பின்னர் தமது பதவி விலகலை அறிவித்த அவர் சொந்தக் காரணங்களுக்காகவே பதவி துறப்பதாகவும் கூறியுள்ளார்- இந் நிறுவனம் வெளியிடும் ஒப்சேர்வர் பத்திரிகையின் ஆசிரியர் மகிந்த பாலவும் பதவி விலகியுள்ளார்-

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அநகாரிக தர்மபால இருந்தால் பிரச்சினைக்கு தீர்வு கண்டிருப்பார்

[கொழும்பு]

அநகாரிக தர்மபாலா இன்றிருந்திருந்தால் வடக்கு-கிழக்கு இனப்பிரச்சினைக்கு சிறந்த முறையில் தீர்வு கண்டிருப்பார் என்று தகவல் ஒலிபரப்பு துறை இராஜாங்க அமைச்சர் ஏ. ஜெ. ரணசிங்க கூறியுள்ளார்.

அநகாரிக தர்மபாலா வின் நினைவு அஞ்சலி வைபவமொன்றில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர் மேலும் கூறுகையில் அவர் இன்று இருந்திருந்தால் சிறுபான்மையினரை வெட்டிக் கொல்வதன் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம் எனக் கூறியிருக்கமாட்டார். இந்த நாடுசிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்று தெரிவித்து இருக்கமாட்டார்.

இந்த நாட்டின் முன்னேற்றத்தில் சிங்களவர்கள் மட்டும் பங்குபற்றவில்லை பொன்னம்பலம் இராமநாதன், பொன்னம்பலம்அருணாசலம் போன்ற தலைவர்கள் சிங்களவர்களோடு சரிசமனாக நின்று நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்காற்றினார்கள் அநகாரிக தர்மபாலாவையும் சிங்களவர்கள் மட்டுமன்றி தமிழர்கள், முஸ்லிம்களும் மறந்து விட முடியாது.

எனவே சிறுபான்மையினரின் உரிமைகளை நாம் பெற்றுக் கொடுப்பது அவசியம்

(4ஆம் ப்க்கம் பார்க்க)

# எதிரணி ஆதரவாளர் மீது பொலிசார் தாக்குதல்

(கொழும்பு)

தென்மாகாண சபை தேர்தல் முடிவடைந்து ஒரு மாத காலத்திற்கு மேலாகியுள்ள போதும் அங்கு ஐக்கிய தேசிய கட்சியினரால் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர் தாக்கப்படுவது தொடர்வதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மாகாணத்தை சேர்ந்த சில பொலிஸ் நிலையங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர் தடுத்து வைக்கப்படுவதாகவும்

(4ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய ஏவு வாகனம் வானில் செலுத்தப்பட்டது

(டில்லி)

சிறிகரிக்கோட்டாவிலிருந்து நேற்று அதிகாலையில் ஏ. எஸ் எல். வி. ஏவு வாகனம் விண்ணில் செலுத்தப்பட்டது இது இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் விஞ்ஞானிகளுக்குக் கிடைத்த பெரும் வெற்றி எனக் கூறப்படுகிறது.

காலை 5-30 மணியளவில் வானமண்டலத்திற்கு 42 தொன் நிறையுள்ள இவ் ஏவு வாகனம் செலுத்தப்பட்ட போது இத்தீவின் வானப் பகுதி செவ்வண்ணமாகக் காணப்பட்டது.

இதன் மூலம் சிரேஸ் எனப்படும் ரோகினி செயற்கைக் கோள் 439 கிலோ மீற்றர் உயரத்தில் நிறுத்தப்பட்டது. எதிர்பார்த்ததைவிட 39 கிலோ மீற்றர் உயரத்தில் இது நிறுத்தப்பட்டது. எட்டரை நிமிடங்களில் இது இவ் உயரத்தை எட்டியது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**"சிறியா நங்கை"**

பாம்புக்கடி விஷத்தை நீக்க உதவுகிறது சிறியா நங்கை மூலிகையின் இலைகள். வளர்த்தெடுக்கக் கன்றுகள் விற்பனைக்கு உண்டு
"மில்க்வைற்" (சி-9345)

**கோழி பராமரிப்பவர் தேவை**

எமது கோழிப்பண்ணையில் கோழி பராமரிப்பதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும் கீழ்க்காணும் முகவரிக்கு 5-5-94 காலை 10 மணிக்கு நேரில் வரவும். அந்திவானம் பதிப்பகம் நாவலர் வீதி நாவாந்துறை யாழ்ப்பாணம். (8182)

## உணவு முத்திரை

கடந்த அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான மேலதிக உணவுமுத்திரைகள் நல்லூர் பிரதேச செயலகத்தினால் கிராம அலுவலர்களிடம் 5 தொடக்கம் 18 வயதிற்குட்பட்ட வறுமை நிவாரண உணவுமுத்திரை பெறும் குடும்பங்கட்கு விநியோகிப்பதற்காக கொடுக்கப்பட்டுள்ளது. (24

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி





**திரு. முத்தையா வல்லிபுரம் திரு. வல்லிபுரம் சிவசோதி**

(உரிமையாளர்கள்- திருமகள் ஸ்ரோர்ஸ் நெல்லியடி)

12-3-1919 < மண்ணில் > 18-5-1943
8-5-1991 < விண்ணில் > 13-6-1989

திதி: 5-5-1994

நெஞ்சத்தின் உள்ளிருத்தி நிறையன்பு சொரிந்தவரே
வஞ்சித்தான் கொடியமனே வாயலுந்த அழுகின்றோம்
தொடர்கதையாய்த் துயர்பெருகத் துடித்துக் கிடக்கின்றோம்
விடமுடியாச் சோகமிது உங்கள் திதி நாளில்
சோதி என்று ஒளிதந்து விட்டகன்ற தெய்வமகன்
பேதலிக்கப் போனாரே பிரிவால் அலறுகிறோம்.
உயிர் உள்ள வரை உங்களை நினைந்துருகும்

- குடும்பத்தினர்

திருமகள் சோதி வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.
(5858)

# பிறந்த நாள் நினைவலைகள்



**யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**
**திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.**

# பதவி வெற்றிடம்

பதவி :- கணக்காளர் 165/88 - 10

வேதனம் :- 1005 - 40x5-50x10- 1705 இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமைகள் :-

அ. கூ. ச. ஊ. 11-ம் சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் / கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் பற்றிய எழுதுவினைஞர் பதவி ஒன்றில் மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூ. ச. ஊ. 12-ம் சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் / கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் பற்றிய எழுதுவினைஞர் பதவியொன்றில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது,

ஆ. பட்டம் பெற்ற கணக்காளர் நிறுவன தகுதிச் சான்றிதழ் பரீட்சை அல்லது ஆகு செலவு முகாமைக் கணக்காளர் நிறுவன தேர்ச்சி சித்தி கட்டம் 1

அல்லது இலங்கை தொழில் நுட்பக்கல்லூரி கணக்கியல் டிப்புளோமா அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்காளர் / உள்ளகக் கணக்குப் பரிசோதனைப்பதவி ஒன்றில் நாலு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயது எல்லை :- வயது 23க்கும் 40க்கும் உட்பட்டதாக இருக்க வேண்டும் (தற்போது கூட்டுறவு ஊழியராக இருப்போருக்கு இந்த நியதி செல்லுபடியாகாது)

வசிப்பிடத் தகைமை :- குறைந்த பட்சம் 2 வருடங்களாவது யாழ் மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

பிணைப்பணம் :- கூ. வே. ஆணைக்குழு சட்டத்திற்கமைவாக சங்கம் தீர்மானிக்கும் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

உள்ளடக்கப்பட வேண்டியவை :- கல்வி, பிறப்பு, நற்சான்று பத்திரங்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

**விண்ணப்பப்பத்திரம் ஏற்கப்படும்**
**கடைசித் திகதி: 20 5. 94**

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் மேற் சொல்லப்பட்ட விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் பதவியின் [illegible] தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

## உலர் உணவு விநியோகம்

(கொழும்புத்துறை)

புங்குடுதீவு நயினாதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தமது கிளைச் சங்கங்கள் மூலம் பாவனையாளர்களுக்கான பங்குனி மாத இறுதி இரண்டு வாரங்களுக்கான இலவச நிவாரண உலர் உணவுப் பொருள்கள் யாவற்றையும் தற்போது விநியோகித்து வருகின்றது. (24)

## சைக்கிள் திருட்டு

மீன் சந்தையில் விடப்பட்ட சைக்கிள் ஒன்று மாயமாக மறைந்தது.

கடந்த 30ம்திகதி கொடிகாவில் அகதிமுகாமில் வசிக்கும் இரத்தினம் விஜயசுதா என்பவர் தனது (ஹீரோ) பெண்களுக்கான துவிச்சக்கர வண்டியை சாவகச்சேரி மீன் சந்தையில் பூட்டிவிட்டு மீன் வாங்கி சற்று நேரத்தினுள் வருவதற்கு முன் துவிச்சக்கர வண்டி மாயமாக மறைந்திருந்தது இக் களவு சம்பந்தமாக சாவகச்சேரி காவல் துறைப் பணிமனையில் புகார் செய்யப்பட்டுள்ளது (86)

## யாழ் வணிகர் கழகம் விடுக்கும் அறிவித்தல்

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட எமது சங்க கழக வணிகப் பெருமக்களுக்கு கடந்த 23-02-94-ல் தங்கள் வணிக நிலையங்களுக்கு தூய தமிழில் பெயர்ப்பலகைகளை அமைக்குமாறு அறிவித்தல் கொடுத்திருந்தோம். மேற்படி அறிவித்தலின்படி இதுவரை பெயர்ப்பலகைகளை தூய தமிழில் மாற்றம் செய்யாதவர்கள் விரைவில் தங்கள் வணிக நிலையங்களில் பெயர்ப்பலகைகளை தூய தமிழில் மாற்றி அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் அத்துடன் இதுவரை காலமும் பெயர்ப்பலகை இல்லாத வணிக நிலையங்களுக்கும் தூய தமிழில் பெயர்பலகைகளை அமைக்குமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி, வணக்கம்

பொதுச்செயலாளர்
யாழ். வணிகர் கழகம்

21, சிறப்பு அங்காடி, மேல்மாடி
யாழ்ப்பாணம். (சி-9350)

**சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்,**
**சாவகச்சேரி**

# கேள்வி கூற்றுப் பெறல்

மேற்படி எமது சங்கத்தின் 24/3125 இலக்க இன்ரநஷனல் லொறியின் உடற்கோப்பு மீள் புனரமைப்பு செய்வதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. விரும்புவோர் 16-05-94 க்கு முன்னதாக நேரில் அல்லது பதிவுத்தபால்மூலம் "பொதுமுகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி" என்ற முகவரிக்கு தமது விண்ணப்பத்தை அனுப்பிவைக்கவும். விண்ணப்பப்படிவத்தின் இடதுபக்க மேல்மூலையில் 'உடற்கோப்பு மீள புனரமைத்தல்' எனக் குறித்து அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு:- லொறியினை காரியாலய வேளைகளில் பிரதம சங்கத்தில் பார்வையிட்டுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்,
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்,
சாவகச்சேரி.
03-05-1994.
(சி-934[illegible])

# நினைவு கூருகின்றோம்..



**கப்டன் ஈழமாறன் / தினேஸ்**

**(சுப்பிரமணியம் இந்திரகுமார் (வவி))**

விபுலானந்தர் வீதி-மாதகல்

தாயின் மடியில் முத்தாக — தமிழீழத்தாயின் மடியில் வித்தாக

நீ. **5 - 5 - 1973** — **11 - 11 - 1993**

தமிழீழம் வென்றிடவே உன்னை
தவமிருந்து பெற்றிட்டாள் உன்னன்னை
தவறாமல் உன்கடமை செய்திட்டாய் -
பூநகரிப் பூமி தன்னில் - வெற்றி
இறுமாப்பில் நீ திரும்பி வருகையிலே
உனையறியாமல் ஏந்திவிட்டாய்
எதிரி குண்டை நெஞ்சினிலே
மாசமுடன் அரவணைத்தாள் தமிழீழத்தாய் தன்மடியில்
இப் பொன் நாளில் உன் நினைவு நிறைவேற
வாழ்த்துகிறோம் உன் பாச உள்ளங்கள்

சங்கத்தானை, சாவகச்சேரி.
(இந்துக்கல்லூரி அருகாமை)

(8194)

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உறவினர்கள்.

---

பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

தலைவர்

**யாழ். மாவட்ட அபிவிருத்திக்**
**கூட்டுறவுச் சங்கம்,**
**திருநெல்வேலி கிழக்கு,**
**கோப்பாய்.**

(சி 9349)

---

## தென்னிந்தியத் திருச்சபை
## யாழ். ஆதீனம்

# நூல் வெளியீடு

அன்புடையீர்,

எமது ஆதீனத்தால் புதிதாக வெளிவர இருக்கும்
**இரு நூல்களான**

**யாழ்ப்பாணத்துத்**
**தமிழ் கிறிஸ்தவ கவிஞர்கள்**
— பேராயர் கலாநிதி S. ஜெபநேசன்

**'மகதலேனா மரியாள்'**
(குறுங்காவியம்)
— நாவேந்தன்

## வெளியீட்டு நிகழ்வு

**05-05-1994 மாலை 3.00 மணி**

**யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபம்**
(யாழ். பொது மருத்துவமனை முன்பாக)
மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்;

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

**அ. ஜெயக்குமாரன்**
செயலாளர் தெ இ திருச்சபை
யாழ். ஆதீனம்

(சி-9337)

---

## 05.05.1994

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் திருமலை-கிண்ணியா பகுதியில் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் கொலை செய்யப்பட்ட,

**லெப். குரு** (ஞானப்பிரகாசம் கலாமோகனராசா-தம்பலகமம் - திருமலை)

**2-ம் லெப். உதயன்** (வடிவேல் பிரபாகரன்-புதுக்குடியிருப்பு-திருமலை)

1988ஆம் ஆண்டு துணுக்காயில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**றோகான்** (தவலிங்கம் ரவிச்சந்திரன் - பூதராயர் கோயில் ஒழுங்கை - பருத்தித்துறை)

1989ஆம் ஆண்டு கிளிநொச்சியில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் அப்பகுதி மருத்துவமனையில் சடலமாக ஒப்படைக்கப்பட்ட தமிழ்த் தொழிலாளி.

1991ஆம் ஆண்டு வவுனியா - கோழியகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கஜன்** (வீரபத்திரன் மந்திரிகுமார் - சம்பூர், மூதூர்-திருமலை)

**2-ம் லெப் வினிஸ்ரன்** (அருளானந்தம் சில்வா செபஸ்ரியான்சில்வா - திருக்கேதீஸ்வரம்)

**ஜெராட்-ஜெனாவிட்** (தம்மையா பிருதுவிராஜ்-கரவெட்டி கிழக்கு- யாழ்)

யாழ் - கொடிகாமத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த,

**வெரியவன்** (பொன்னுத்துரை சந்திரலிங்கம் - 5-ம் படிவம் -வவுனியா)

மட்டு - பெரியபோரதிவுப் பகுதியில் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

**சுகுமார்** (சிங்கநாயகம் சிவராசா - கோட்டைக் கல்லாறு - மட்டு)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட உறுகாமத்தைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1992ஆம் ஆண்டு வவுனியா - நொச்சிமோட்டை-மாமடுப்பகுதியில் சிறிலங்கா இராணுவ தொடர் காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய-

**லெப். ஜெகதீஸ்வரன்** (பரமசிவம் ஜெயசீலன்-தவசிகுளம் - வவுனியா)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9344)

நல்லூர் ... மன்றம் யாழ்ப்பாணம்

**சிந்தனைக்கு**

*இன ஒதுக்கல் ஆட்சியின் வன்முறைக்கு எதிராக வன்முறை ரீதியில் போராடுவதைத்தவிரவேறுமார்க்கம் கிடையாது.*

*- நெல்சன் மண்டேலா*


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 05-05-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024

தபால்·பெட்டி எண் - 05


## கறுப்பின மக்களின் வெற்றி

தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களின் ஆட்சி மலர்கின்றது. இனவெறி பிடித்த வெள்ளையரின் ஆட்சிக்கு முடிவு வருகின்றது. இது தென்னாபிரிக்க கறுப்பின மக்களுக்கு மட்டுமல்ல, உலகிலுள்ள விடுதலை வேண்டிப் போராடும் மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி ஊட்டக் கூடிய செய்தியாகும்.

இவ் விடுதலைக்காக தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் பட்ட துன்பதுயரங்கள் எண்ணில் அடங்காதவை அவர்கள்சிந்திய குருதி அவர்களின்தாயகத்தை செந்நிறம் ஆக்கியது' அவர்கள் சிந்திய வியர்வை ஆறாக ஓடியது. சிறைகளிலும், தெருக்களிலும் அவர்கள் பட்ட அவலங்கள், அவமானங்கள் எண்ணிப்பார்க்க முடியாதவை. தாயக மண்ணிலேயே அடிமையாக அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை கேட்போரைக் கூட கலங்க வைப்பதாக இருந்தது.

வந்தேறு குடிகளான சிறுபான்மை வெள்ளையர் பூர்வீக குடிகளான கறுப்பர்கள் மீது கட்டவிழ்த்து விட்ட ஒடுக்குமுறையானது உலகில் நிறவெறிக்கும், இனவெறிக்கும் முன்னுதாரணமாக அமைந்தது. அம்மக்களின் செல்வத்தை சூறையாடிய அவர்கள், அம்மக்களை அடிமைகளிலும் கேவலமாக மிருகங்கள் போன்று நடத்தினர். மனிதாபிமானமுள்ள, நாகரிக உலகமே வெட்கித் தலை குனியும் அளவிற்கு அடக்குமுறை இருந்தது.

இந்நிலையில் தான் தமது உரிமைக்காகவும், தேசத்தின் விடுதலைக்காகவும் கறுப்பின மக்கள் போராடத் தொடங்கினர், ஒடுக்குமுறையின் காலம் நீண்டது போன்றே அடக்குமுறைக்கு எதிரான போராட்டமும் நீண்டதாகவே இருந்தது. இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து தென்னாபிரிக்காவில் வெள்ளையரின் இனவெறிக்கு எதிரான குரல் கேட்கவே தொடங்கியது.

இது இந்நூற்றாண்டின் மத்தியில் அது பலமாகவே கேட்கத்தொடங்கியது. 1952இல்ஒலிவர்தம்பேத்தாவுடன் இணைந்து நெல்சன்மண்டேலா அமைத்த ஆபிரிக்கதேசிய காங்கிரஸ்கறுப்பினமக்களின்குரலாக ஒலிக்கத் தொடங்கியது. ஆனால் ஆரம்பத்தில் சாத்வீகமான ரீதியில் தமது உரிமையை மக்கள் கேட்டபோது தென்னாபிரிக்க இனவெறி அரசு அதைக் கண்டுகொள்ளவில்லை. மாறாக 1962ஆம் ஆண்டில் அரசிற்கெதிராகச் சதி செய்ததாக நெல்சன் மண்டேலாவைக் கைது செய்து சிறையில் அடைத்தது

# பெரும் நிதி மோசடி காரணமாக மலத்தியோன் கொள்வனவு பாதிப்பு

மலத்தியோன் கொள்வனவில் சிறிலங்கா அரசாங்கம் பெரும் மோசடியில் ஈடுபட்டதால் கடந்த ஆண்டு நிதி வழங்கும் நாடுகள் மலத்தியோனுக்கென ஒதுக்கிய பணத்தின் அரைவாசிக்கு குறைவாகவே மலத்தியோன் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, கடந்த ஆண்டு சிறிலங்கா அரசாங்கத்திற்கு மலத்தியோன் பாவனைக்காக நிதி வழங்கும் நாடுகள் 42 கோடி ரூபா பணம் ஒதுக்கியிருந்தன.

இதில் 18கோடி ரூபா பணத்திற்கே மலத்தியோன் பாவிக்கப்பட்டுள்ளது, மலத்தியோனை கொள்வனவு செய்யும் நிறுவனத்திடம் ஏற்பட்ட தரகுப் பண ஊழலை அடுத்தே மிகுதிப் பணத்திற்குரிய மலத்தியோன் பாவிக்கப்படவில்லை.

சிறிலங்கா அரசாங்கம் வெளிநாட்டு உதவிகளை வீண் விரயம் செய்வதும் அந்த உதவிகளை தேவைக்கென பயன்படுத்துவதில் அக்கறையின்மையாக இருப்பதும் அறிந்ததே

நிதி வழங்கும் நாடுகளின் பணத்தில் இலாபம் பெற அரசாங்கம் முயற்சித்த போது ஒரு முக்கியமான வேலைத்திட்டத்திற்குரிய பணம் வீணாகிவிட்டதென தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம், இலங்கை முழுதும் மலேரியா நோயின் தாக்கம் அதிகரித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது (தி: ச)

### லண்டன் தூதரகத்தில்

## பிரட்மனின் மகன் சேவை நீடிப்பு குறித்து ஆட்சேபம்

(கொழும்பு)

லண்டனில் உள்ள சிறிலங்கா தூதரகத்தில் ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனின் மகனான எசல வீரக்கோன் தொடர்ந்து பணியாற்ற கால நீடிப்பு வழங்கப்பட்டமை குறித்து பெரும் சர்ச்சைகள் எழுந்துள்ளன.

லண்டனில் உள்ள சிறிலங்கா தூதரகத்தின் முதலாவது செயலாளராக எசலவீரக்கோன் 1992 முதல் சேவைக்கால நீடிப்புடன் பணியாற்றி வருகிறார். இவர் முன்னர் பாரிசில் உள்ள சிறிலங்கா தூதரகத்தில் பணியாற்றி வந்தவராவார். வெளிநாட்டு சேவை சட்டத்தின்படி லண்டன், பாரீஸ் நகர தூதரகங்கள் முதல் வகுப்பு தூதரகங்களாக கணிக்கப்படுகின்றன.

முதல் வகுப்பு தூதரகம் ஒன்றில் பணியாற்றும் ஒருவர் இதே போன்று வேறு ஒரு முதல் வகுப்பு தூதரகத்திற்கு இடமாற்றம் செய்யமுடியாது. ஆனால் எசல வீரக்கோன் இவ்வாறு பாரிசிலிருந்து லண்டனுக்கு இடமாற்றப்பட்டு வேலை நீடிப்பு வழங்கப்பட்டு வருவது குறித்து ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் எசலவீரக்கோன் லண்டனில் உள்ள சிறிலங்கா தூதர் சிறில் ரணதுங்காவின் விசேட வேண்டுகோளிற்கேற்பவே சேவை நீடிப்பு பெற்றதாக வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எசல வீரக்கோன் வெளியுறவுச் செயலர் பேர்னாட் திலகரட்ணவின் மருமகன்என்பது குறிப்பிடத்தக்கது.

### சங்காபிசேகம்

(வடமராட்சி)

நாட்டில் அமைதி ஏற்படவும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நல்லாசி வேண்டியும் கடந்த புதன் பொலிகண்டி மருதாம்புலம் பத்திரகாளிஅம்மன் ஆலயத்தில் 108 சங்காபிஷேமும் விசேட அபிஷேகமும் அவ்வூர் மக்களினால் நடத்தப்பட்டது. (யோ)

### அதிகாரிகள் வந்தனர்

சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் பிரதிநிதிகள் இருவர் யாழ். வந்துள்ளனர். திரு பா. கெங்காதரன், செல்வி லிபி ஆகியோரே இவர்களாவர் இவர்கள் ஒருவாரம் இங்கு தங்கியிருந்து விட்டு திரும்புவர். (யோ)

## நன்றி கூறவே லக்கி என்னிடம் வந்தார்

### சதிக்கு கூரே மறுப்பு

(கொழும்பு)

தாமும் மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவும் இணைந்து அரசை கவிழ்க்க சதி செய்ததாக வெளியான செய்திகளை சிறிசேன கூரே மறுத்துள்ளார்

கடந்த வாரம் நான் இந்தோனேஷியாவிலிருந்து திரும்பியபோது நான் முன்னதாக இராணுவத்தினருக்கென வழங்கிய நிலம் தொடர்பாக தமது நன்றியை தெரிவிக்கவே மேஜர் ஜெனரல் லக்கி அல்கம என்னிடம் வந்தார் என சிறிசேன கூரே தெரிவித்தார்.

லக்கி அல்கம என்னிடம் நன்றி கூறவந்த சம்பவமே நாம் சதி செய்ய திட்டமிடுவதாக திரித்துக் கூறப்பட்ட செய்தியாகியது என அவர் குறிப்பிட்டார்.

## பிரேமாவை பின்பற்றினால் இ. தொ. கா. ஆதரவளிக்கும்

### அமைச்சர் தொண்டமான்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்பவர்களுக்கே எமது ஆதரவிருக்கும் என இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான தொண்டமான் தெரிவித்துள்ளார். அவ...

அவர் ஜனாதிபதி பிரேமதாசாவின் சிலை ஹல்ஸ்ரோர்ப்பில் திறந்து வைத்த வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

நான் அநீதிகளை எதிர்க்க ...

### 68 தமிழர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த நான்கு மாதங்களில் மட்டும் 68 தமிழர்கள் சிறிலங்கா படையினரின் நடவடிக்கைகளால் உயிரிழந்துள்ளனர் மேலும் சுமார் 40 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் கடற்படையினரால் கொல்லப்பட்ட மீனவர்களே என்றும் ...

## பிரச்சினையை இனம் கண்டு தீர்வை முன்வைக்குக

### சுதந்திரக்கட்சி உறுப்பினர் பேராசிரியர் பீரிஸ்

(கொழும்பு)

சுதந்திரக்கட்சி இன்று நாட்டில் தோன்றியுள்ள முக்கிய பிரச்சினைகளை கண்டுபிடித்து அவற்றிற்கு சரியான ஓர் தீர்வை முன்வைக்க வேண்டும். இந்த நிலையிலேயே இக்கட்சியை எதிர்காலத்தில் முன்னோக்கி கொண்டு செலுத்த முடியும் என பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

லங்கா தீப பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேற்படி கருத்தை அவர் தெரிவித்துள்ளார் தொடர்ந்து அவர் தெரிவிக்கையில் மக்களின் அவதானத்தையும் தேவைகளையுமே மையமாகக் கொள்ள வேண்டும் என்றும் இது குறித்து மக்களுக்கு தெரிவித்து அவர்களின் ஆக்க பூர்வமான கருத்துக்களை பெற்றுக் கொள்ள வேண்டும் இந்த நிலையையே இன்று மக்கள் விரும்புகின்றார்கள் என சுட்டிக்காட்டியுள்ளார்.

கைதுசெய்யப்பட்டு காணாமல் போனவர்கள் விடயத்தில் மனித உரிமை மீறும் செயல். ஏனெனில்இவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா இல்லையா என்று குறித்து இன்னும் மக்கள் மத்தியில் சந்தேகம் நிலவுவதாகவும் இந்த நிலை சுதந்திரக்கட்சி ஆட்சியில் ஏற்படமாட்டாது எனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்காகவும், இனத்திற்காகவும் தம்மை பரித்தியாகம் செய்யக்கூடிய ஓர் உன்னத சக்தியை மீண்டும் அரசியலில் ஈடுபடுத்தக்கூடிய ஓர் அரசியல் வட்டத்தை உருவாக்க வேண்டும். இதற்காக சகல தரப்பினரின் ஒத்துழைப்பு தேவையானது என அவர் சுட்டிக்காட்டினார்

## அரசுக்கு எதிராக சதி கூரே கைதாகலாம்?

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக சதித் திட்டம் ஒன்றை தீட்டிய குற்றச் சாட்டின் கீழ் அமைச்சர் சிறி சேன கூரே உட்பட மேலும் பலர் எந்த நேரமும் கைது செய்யப்படலாம் என ''ராவய'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவர் கைது செய்யப்படால் அல்லது விசாரணைக்கு உட்படுத்தப் பட்டால் கட்சி மேலும் பல சிக்கலுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்ற அச்சத்தினால் இவர் கைது செய்யப்படுவது தாமதமாகலாம் என தெரிய வருகின்றது.

## ராவய பத்திரிகை மீது ரொனி வழக்கு தாக்கு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ரொனி த மெல் 'ராவய' பத்திரிகைக்கு எதிராக மானநஷ்ட வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும் ஐந்து கோடி ரூபா நஷ்டஈடு கோரியிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

ஏப்பிரல் மாதம் 10ஆம் திகதி ராவய பத்திரிகையில் வெளி வந்த ''றொனியின் அடித்த பணக் கொள்ளை வெளிவந்தது'' என்ற தலையங்க செய்திக்கு எதிராக இவர் வழக்கு தாக்கல் செய்ததாகவும் இவரின் வழக்கறிஞர் மென் சிறி கூரே தெரிவித்துள்ளார்

## மேலும் 200 பேருக்கு கண் சத்திரசிகிச்சை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் கண்பார்வை குறைந்த மேலும் 200 பேருக்கு சாவகச்சேரி 'லயன்ஸ்' கழகத்தினர் கண் பரிசோதனையினை மேற்கொண்டு, கண்பாதிக்கப்பட்டோருக்கு கற்றாக் சத்திரசிகிச்சையினை செய்வதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இச் சத்திரசிகிச்சை சாவகச்சேரி மருத்துவ மனையில் ... கருதி இந்தச் சிகிச்சையினை தொடர்ந்து கண் பரிசோதனைகளை மேற்கொண்டு சிகிச்சை செய்யப்படவுள்ளது (86)

## சேவை நீடிப்பு

(கொழும்பு)

இந்தியாவிற்கான சிறிலங்கா தூதுவராக பணியாற்றும் டாக்டர் நெவில் கருணாரட்ணாவின் சேவைக்காலம் கடந்த மார்ச் மாதத்துடன் முடி...

கியது. ஆனால் ஆரம்பத்தில் சாத்வீகமான ரீதியில் தமது உரிமையை மக்கள் கேட்டபோது தென்னாபிரிக்க இனவெறி அரசு அதைக் கண்டு கொள்ளவில்லை. மாறாக 1962ஆம் ஆண்டில் அரசிற்கெதிராகச் சதி செய்ததாக நெல்சன் மண்டேலாவைக் கைது செய்து சிறையில் அடைத்தது

ஆனால் மண்டேலா சிறையில் அடைக்கப்பட்டாலும் தேசியகாங்கிரஸ் தனது போராட்டத்தைக் கைவிட்டுவிடவில்லை. அதேபோன்று மண்டேலாவும் தமதுகொள்கையில் இருந்து மாறவில்லை, பலாத்காரத்திற்கு எதிரான வழி பலாத்காரமே என அவர் தெரிவித்தார். நிபந்தனைகளுடன் கூடிய விடுதலையையும் அவர் நிராகரித்தார். 27 வருடங்கள் தொடர்ந்து சிறையில் வாடினார்.

இதேவேளை தென்னாபிரிக்காவில் இனவெறி அரசிற்கு எதிரான போராட்டம் தொடர்ந்தது. இப்போராட்டத்தில் மக்கள் தமது உயிர், உடைமை அனைத்தையும் தியாகம் செய்து போராடினர். சளைக்காது போராடினர். இனவெறி அரசாலும், இனக்கலவரங்களினாலும், பல்லாயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டார்கள். ஆயிரக்கணக்கில் சிறை சென்றார்கள். துப்பாக்கிச் சூடு சாதாரண நிகழ்வாகியது இதேசமயம் உலகில் உள்ள மனிதாபிமானம் மிக்கவர்கள் கறுப்பு இன மக்களுக்காகக் குரல் எழுப்பினர்.

உலகில் சில நாடுகள் உளப்பூர்வமாக உதவின, சில நாடுகள் தமது லாபத்திற்காக உதவுவது போல் காட்டிக் கொண்டன. பல நாடுகள் விருப்பமிருந்தும் தவிர்க்க முடியாது கறுப்பின மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிராக வெளிப்படையாகச் செயற்பட முடியாது ஒதுங்கிக் கொண்டன

இந்நிலையில் தான் 1990இல் நெல்சன் மண்டேலா விடுதலை செய்யப்பட்டார். அவரின் விடுதலையில் வெள்ளை நிற ஜனாதிபதி டிகிளார்க்கின் அணுகுமுறையும் காரணம் எனக் கூறப்படுகின்றது, இதன் அடிப்படையில் கடந்த வருட சமாதானத்திற்கான நோபல் பரிசு மண்டேலா - கிளார்க் ஆகியோருக்கும் வழங்கப்பட்டது,

ஆனால் இன்றைய ஆட்சி மாற்றத்தை சமாதானரீதியில், தேர்தல் ரீதியாக இரத்தம் சிந்தாமல் நடத்தப்பட்ட ஆட்சி மாற்றம் என்று சொல்வதற்கோ வெள்ளையர்களின் மனமாற்றத்தின் விளைவாக இடம்பெற்ற பதவி மாற்றமோ என்று மேலெழுந்த வாரியாகக் கூறிவிட முடியாது. கறுப்பின மக்களின் எழுச்சியின் முன் இனவெறிப்போக்கை தொடர்ந்து கைக்கொள்ள முடியாது என்பதை உணர்ந்ததினால் எழுந்த மனமாற்றமே இதுவாகும். அதாவது வெள்ளையர்கள் தமது நிலையைக் காத்துக் கொள்வதற்கான இறுதி முயற்சியே இதுவாகும். இத்தோல்வி தனியாக இனவெறி பிடித்த தென்னாபிரிக்க வெள்ளையர்களுக்கு மட்டுமல்ல, உலகிலுள்ள இனவெறி மற்றும் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் கிடைத்துள்ள தோல்வியாகும்.

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்பவர்களுக்கே எமது ஆதரவிருக்கும் என இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான தொண்டமான் தெரிவித்துள்ளார். அவரது கொள்கையை கடைப்பிடிக்காத எந்த ஒரு தலைவருக்கோ, கட்சிக்கோ எமது ஆதரவு கிடையாது என

சாவின் சிலை ஹல்ஸ்டோர்ப்பில் திறந்து வைத்த வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

நான் அநீதிகளை எதிர்க்க தயங்கமாட்டேன். யாராவது அநீதி இழைக்க முற்பட்டால் அதற்கு இந்த தொண்டமான் உதவப்போவதில்லை என அவர் அறிவித்தார்,

டிக்கைகளால் உயிரிழந்துள்ளனர் மேலும் சுமார் 40 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் கடற்படையினரால் கொல்லப்பட்ட மீனவர்களே என்றும் மற்றும் விமானக்குண்டுவீச்சு, எறிகணை வீச்சு என்பவற்றினால் உயிரிழந்ததாகவும் கூறப்படுகின்றது

பட்டோருக்கு கற்றாக் சத்திரசிகிச்சையினை செய்வதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இச் சத்திரசிகிச்சை சாவகச்சேரி மருத்துவ மனையில் கடந்த மாதம் கண்பாதிக்கப்பட்ட 11 பேருக்கு நடத்தப்பட்டது மேலும் கண்பாதிக்கப்பட்டவர்களின் நன்மை

(கொழும்பு)

இந்தியாவிற்கான சிறிலங்கா தூதுவராக பணியாற்றும் டாக்டர் நெவில் கருணாரட்ணாவின் சேவைக்காலம் கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்த போதிலும் அவருக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

## உண்மையான தி. மு. க. கருணாநிதி அணியினரே

### தேர்தல் ஆணையாளர் தீர்ப்பு

(சென்னை)

மு கருணாநிதியைத் தலைவராகவும், க. அன்பழகனை பொதுச் செயலாளராகவும் கொண்ட அணியினரே திராவிட முன்னேற்றக் கழகமாக தேர்தல் ஆணையகத்தால் கணிக்கப்பெறும் என்றும், இவர்களே தி.மு.க.வின் கறுப்பு சிவப்பு கொடியையும், உதயசூரியன் சின்னத்தையும் பயன்படுத்த தகுதியுடையவர்கள் என்றும் தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் தீர்ப்பளித்துள்ளார்.

கட்சியின் கொடி மற்றும் சின்னம் என்பவற்றிற்கு உரிமைகோரி வை. கோபாலசாமி அணியினரும், கருணாநிதி அணியினரும் தனித்தனியே தாக்கல் செய்த மனுக்கள் மீது விசாரணை நடத்திய தேர்தல் ஆணையாளர் இருதரப்பு விவாதங்களையும் செவிமடுத்து, ஆவணங்களையும் பரிசீலித்த பின்னர் மேற்படி தீர்ப்பை வழங்கியுள்ளார்

இந்த விசாரணையின்போது வை கோ. அணியினர் கட்சியின் சின்னத்தையும், கொடியையும் முடக்கி வைத்து இரு அணியினருக்கும் வெவ்வேறு சின்னங்கள் ஒதுக்கும்படி கோரியதையும் தேர்தல் ஆணையம் நிராகரித்துள்ளது.

## தெ. யேமன் மிக் விமானம் வட யேமனால் சுடப்பட்டது

(சானா)

தென்யேமனுக்குச்சொந்தமான போர் விமானம் ஒன்று வட யேமன் படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. வடயேமனில் உள்ள ஒரு இராணுவ தளம் மீதாக தென்யேமனின் மிக் - 21 ரக போர் விமானம் ஒன்று தாழ்வாக பறந்து சென்ற போதே அது சுட்டு வீழ்த்தப்பட்டது.

இதே சமயம் தென்யேமன் படைத் தளங்களை வடயேமன் துருப்புகள் சுற்றி வளைத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 1990இல் வட யேமனுடன் தென் யேமன் இணைந்து ஒரேநாடான போதிலும் இரு பகுதிகளினதும் படைகள் கடந்தஒருவாரகாலமாக கடுமையாக மோதிவருவதும்இதில் 70பேர்வரையில்பலியாகியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## தேர்தலில் இன்காட்டா கட்சி மோசடியில் ஈடுபட்டது

### ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் குற்றச்சாட்டு

(ஜோகனர்ஸ்பேர்க்)

தென் ஆபிரிக்காவில் தேர்தல்களின் போது இன்காட்டா சுதந்திரக் கட்சியின் கோட்டையான நேட்டாலில் தேர்தல் மோசடிகள் நடைபெற்றுள்ளதாக தேர்தலில் பெரு வெற்றி பெற்றதும் இன்காட்டா கட்சியின் பரம எதிரியுமான ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

தேர்தல் பெட்டிகளில் இன்காட்டா ஆதரவாளர்களான சூலு இனத்தவர்கள் போலி வாக்குச் சீட்டுகளை சட்டவிரோதமாக திணித்ததாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் குற்றஞ் சாட்டியுள்ளது எனினும் இக் குற்றச்சாட்டை மறுத்துள்ள இன்காட்டா சுதந்திரக் கட்சி தவறு எல்லாப் பகுதியிலும் நடைபெற்றுள்ளது. எம்மை விட ஆபிரிக்க தேசிய காங்கிரசே குற்றஞ் சாட்டப்பட வேண்டியவர்கள் எனத் தெரிவித்துள்ளது

இதனிடையே தேர்தல் வாக்குகள் தொடர்ந்து எண்ணப்பட்டு வருகின்ற போதிலும் திட்டமிட்டபடி செவ்வாயன்று ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாக பதவி ஏற்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது

## இஸ்ரேல் - பி.எல்.ஓ. பேச்சு சுமுக தீர்வு கண்டது

### காஸா, ஜெரிக்கோ சுயாட்சி பிரதேசமாகும்

(செய்ரோ)

எகிப்தில் நடைபெறும் இஸ்ரேல் பிரதமர் ராபினுக்கும் பி.எல்.ஓ தலைவர் அரபாத்திற்கும் இடையிலான பேச்சுகளில் காஸா ஜெரிக்கோ பகுதிகளில் பாலஸ்தீன சுயாட்சி குறித்து நிலவிய முரண்பாடுகள் நீங்கியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

பேச்சுகளில் முரண்பாடுகளை நீக்கும் முயற்சியில் அமெரிக்காவும் எகிப்தும் ஈடுபட்டுள்ளன. பேச்சுகளைத் தொடர்ந்து இரு தலைவர்களும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவர். பேச்சுகள் முன்னதாக நேற்று முன்தினம் அதிகாலை வரை நீடித்தது

ஒப்பந்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து காஸா, ஜெரிக்கோ பகுதிகளிலிருந்து இஸ்ரேலியப்படைகள் வெளியேறும் தொடர்ந்து இப்பகுதி பாதுகாப்பை புதிய பாலஸ்தீனிய பொலிசார் பொறுப்பேற்பர். ஜெரிக்கோ பகுதி குறித்த இழுபறி நிலையே கடந்த சில நாட்களாக பேச்சுவார்[illegible]யின் பேது காணப்பட்ட[illegible]றிப்பிடத்தக்கது.

### கருத்து வேறுபாடு

(கெய்ரோ)

இஸ்ரேலுக்கும் பாலத்தீனிய விடுதலை இயக்கத்திற்கும் இடையே எகிப்திய தலைநகர் கெய்ரோவில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தில் இடம்பெற வேண்டிய வாசகங்கள் தொடர்பாக இஸ்ரேலுக்கும் பாலத்தீனிய விடுதலை இயக்கத்திற்குமிடையே இறுதி நேரத்தில் கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டுள்ளது

## அநாதை விடுதியில் 21 சிறுவர் பலி

(கிகாலி)

றுவாண்டாவில் அநாதை விடுதி ஒன்றில் 21 சிறுவர்கள் அரச படைகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களுடன் 13 செஞ்சிலுவை சங்க தொண்டர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# ஆசிரியர் சேவையில் மாற்றம் முன்வரைவு பரிசீலனையில்

(கொழும்பு)

ஆசிரியர் சேவையில் மாற்றம் கொண்டு வரும் முன்வரைவு ஆசிரியர் தொழிற் சங்கங்களின் அபிப்பிராயத்தைப் பெறுவதற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த முன்வரைவுத் திட்டம் ஆசிரியர் தொழிற்சங்கங்களின் பார்வைக்குச் சென்ற கிழமை சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

சிறிலங்கா நிர்வாக சேவை மற்றும் சிறிலங்கா கல்வி நிர்வாக சேவையில் உள்ள சேவை நிபந்தனை, பதவி உயர்வு வாய்ப்புகளுக்குச் சமமான நிலைக்கு ஆசிரியர் சேவையைக்கொண்டுவருவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

தேசிய கல்விச் சேவை ஆணைக்குழு மற்றும் ஆசிரியர் தொழிற் சங்கங்களின் ஆலோசனையின் அடிப்படையில் நான்கு பேர் கொண்ட குழு ஒன்று இந்த முன்வரைவுத் திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளது இதற்கு அமைச்சர் அவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஆசிரியர் தொழிற் சங்கங்களும், தேசிய சேவை ஆணைக்குழுவும் முன்வரைவுத் திட்டம் குறித்த பரிந்துரையைத் தெரிவிக்கும்படி மூன்று கிழமைக் காலக்கெடு கொடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. பரிந்துரை கிடைக்கப் பெற்றதும், உயர்கல்வி மற்றும் கலாசார விவகார அமைச்சர் லொக்கு பண்டார தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் முன்வரைவுத் திட்டம் தொடர்பாக ஆலோசனை நடத்தவுள்ளார்.

சிறிலங்கா நிர்வாக சேவையில் உள்ளவர்கள் அனுபவிக்கும் சம்பளத்திட்டம், பதவி உயர்வு வாய்ப்புகள் ஆசிரியர் சேவையில் உள்ளவர்களுக்கும் வழங்குவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும் என்று கல்விப்பணிப்பாளர் நாயகத்தின் திட்டமிடல் பிரிவைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

முன்வரைவுத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள சிறிலங்கா ஆசிரியர் சேவையில் சேர்க்கப்பட உள்ளவர்கள், சிறிலங்கா நிர்வாகசேவை மற்றும் சிறிலங்கா கல்வி நிர்வாகசேவையில் உள்ளவர்கள் பெறும் சம்பளத் திட்டத்துக்கு சமமான சம்பளத் திட்டத்தில் அமர்த்தப் படுவார்கள். அத்துடன் மற்றச் சேவைகளுக்குரிய நன்மைகளும் சிறிலங்கா ஆசிரியர் சேவையில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் என அதே வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர்.

இதனால் அர்ப்பணிப்புள்ள ஆசிரியர் சேவையில் நீடிப்பார்கள். கல்வி அமைப்பின் தரம் உயரும் இத்திட்டத்தின் விளைவாக ஆசிரியர் சமூகத்தின் அந்தஸ்தும் சமூகத்தில் உயர்வடையும் என்று கல்வி திட்டமிடல் பிரிவுப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இத்திட்டத்தின் இறுதி வடிவம் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றதும், நான்கு பேர் கொண்ட குழு ஒன்று சிறிலங்கா ஆசிரியர் சேவைக்கான திட்டம் ஒன்றைத்தயாரிக்கும்எனத்தெரிய வருகிறது அத்துடன் புதிய சேவையில் ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விதிமுறைகளும் வரையறைகளும் உருவாக்கப்படவுள்ளன.

## நாற்பத்தொராம் நாள் நினைவலைகள்



**டியூக்சந்திரா சாதுசிகாமணி**

(சுதுமலை)

(ஜேர்மனியில் அகாலமரணம் அடைந்தவர்)

---

**எதிரணி**

இதற்கு பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் செயற்படுவதாகவும் தெரியவருகின்றது வெலிகம அக்குரசை பொலிஸ் பகுதிகளில் இந் நிலை உச்சக் கட்டத்தை அடைந்துள்ள போதும் பொலிசார் முறைப்பாட்டை பதிவுசெய்ய மறுத்து வருகின்றனர்.

ஐ. தே. க. மாகாண சபை உறுப்பினர் ஒருவர் பொது ஜன ஐக்கிய முன்னணி வெலிகம கிளை அமைப்பாளராக செயல்பட்டவர்மீது கைக்குண்டு வீசியதாகவும் இது

# புதிதாக நியமனம் பெறும் ஊழியர் விபரம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

1993இல் நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் படி கடந்த இரண்டாம்திகதியில்இருந்துநியமனம் பெறும் எழுதுவினைஞர்கள் சிறாப்பர்கள், தமிழ் ஆங்கில தட்டெழுத்தாளர்கள் மற்றும் சிற்றூழியர்களின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

இவர்கள் யாழ்ப்பாணம் கச்சேரியில் நிர்வாக உத்தியோகத்தரிடம் இருந்து நியமனக்கடிதங்களை உடனடியாகப் பெற்று உடன் அந்தந்த திணைக்களங்களில் பதவிகளைப் பொறுப்பேற்குமாறு யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்

இவர்களின் விபரங்கள் வருமாறு

எழுதுவினைஞர்

ஆர். பத்மராஜன், குரும்பசட்டி, புலோலி தெற்கு, புலோலி, ஆர். பத்மாவதி, 859 ஏ. காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். பீ கமலகுமாரி, மலர்மகள் இல்லம், மூளாய் சுளிபுரம். பீ. தயாளினி, சூராவத்தை, சுன்னாகம்.

கணக்குப் பதியுநர்

செல்வி. பீ டேவிட், ராஜினி மகால், சூராவத்தை, சுன்னாகம்

சிறாப்பர்

எஸ். என். கேதிஸ்வரன், 177, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்' ஆர். சிவதேவி, குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பழை, கே சிவநிதி, அசோகமனை, ஊரெழு வடக்கு, சுன்னாகம்

தட்டெழுத்தாளர் (தமிழ்)

ரீ. கணேசமூர்த்தி, பாடசாலை வளவு, கரணவாய் கிழக்கு, கரவெட்டி திருமதி ஜீ. காந்தராஜா, சங்கானை மேற்கு பண்டத்தரிப்பு

தட்டெழுத்தாளர் (ஆங்கிலம்)

செல்வி எஸ் ஜீவரத்தினம், 114, செங்குந்தா ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம், செல்வி எஸ் பத்மநாதன் மே / பா. என், நடராசா, ஆர், கே. எம் ஒழுங்கை கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில், செல்வி, ஆர். நாகராஜா, 9/3, வெள்ள ந் தெரு, யாழ்ப்பாணம், செல்வி ஜே. நமசிவாயம், நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு கொக்குவில், செல்வி எஸ் ராஜரத்தினம், குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பழை

சிற்றூழியர்

எம், திருநாவுக்கரசு, பஞ்சரத்தினம் ஒழுங்கை, 164/10, கச்சேரி, நல்லூர் வீதி, யாழ்ப்பாணம், ஏ. சிவஞானபிரகாசம், யாக்கரை பிள்ளையார் கோவில், கரவெட்டி வடக்கு, கரவெட்டி. வீ, திருப்பதி நாதன், நாச்சிமார் கோவில் ஒழுங்கை. நவாலி வடக்கு, மானிப்பாய்.

---

**கப்பல்**

றையும் பிரயாணிகள் எடுத்துச் செல்லலாம் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ள போதிலும் இப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன

நேற்றுக் காலை நரோமா கப்பலில் வந்த இப் பிரயாணிகளின் பொருள்கள் கடற்படையால் கைப்பற்றப்பட்டமை குறித்து யாழ். அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

(இ. ச)

---

**ஏழு நாட்களின்**

றைய தினம் ஓய்வு நாள் என்பதால் அந்நிறுவன பிரதிநிதியால் அது தபாலில் சேர்க்கப்பட்டதாம்.

பின்பு மரணச் சடங்கு முடிந்து திரும்பியவர் வீடுவந்தபோது அவர்களுக்கு எதுவித தகவலும் கிடைக்காதிருந்தது தெரியவந்துள்ளது. மறுநாள் 27ஆம் திகதி காலை

---

**ஐ நா**

பாகதேடுதல் நடத்தும் கமிட்டியின் செயலாளர் இஷட் பிட்டர் மேற்படி காணாமற் போன பிள்ளைகளைப் பெற்றோர் அமைப்பிடம் மேற்படி விபரத்தைக்கோரியிருப்பதாக அவ் அமைப்பின் செயலாளர் சந்திரா பீரிஸ் தெரிவித்துள்ளார்

தடுப்பு முகாமில் உள்ளோர் மற்றும் காணமற்போனவர்கள் தொடர்பாச முழு விபரத்தையும் மேற்படி அமைப்பின் அலுவலகத்திற்கு உடன் அனுப்புமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்

---

**அநகாரிக**

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி டி. பி விஜேதுங்காவிற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்தார்.

இவ் வைபவத்தில் கலந்து கொண்ட கொழும்பு மநகரபதில் மேயர் கே. கணேசலிங்கம் அநகாரிக தர்மபாலாவின் சிலைக்கு மலர் மாலை சாத்தி அஞ்சலி செய்தார்.

---

**காமினி**

ராகவும் இவர் பதவி வகிக்கின்றார்

---

**இந்திய**

கூடுதல் உயரத்தில் இந்த செயற்கைக் கோள் நிறுத்தப் பட்டுள்ளமை, வானியல், வானொலியியல் கருவிகளை சிறந்த முறையில் செயற்படுத்த உதவும் என்பதோடு, இந்த செயற்கைக் கோளின் ஆயுட் காலத்தையும் ஓராண்டு காலம் நீடித்துள்ளது.

இந்த செயற்கை கோளை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் பல்வேறு மையங்களும் அவதானித்துக் கொண்டிருக்கின்றன. செயற்கைக் கோள் எதிர்பார்க்கப் பட்டதைப் போல நன்கு செயற்பட்டுக் கொண்டிருப்பதாகவும், இருதினங்களின் பின்பு அதிலுள்ள சாதனங்கள் இயக்கி வைக்கப்படும் எனவும், விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

---

**சிறிகோத்தாவில்**

அப்போது தமது கோரிக்கை ஏற்கப்படவில்லை. இப்போது என்னை பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலகுமாறு கோரினார்கள் அதனாலேயே பதவிவிலகுகிறேன் என்றும் தெரிவித்தார்-

---

**இரு அமைச்சர்கள்**

யில் இருந்தும் நீக்குவதற்கான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது-

---

**லெப் ஜெனரல்**

தாகவும் இரகசிய பொலிஸ் பிரிவின் உதவி பொலிஸ் மா அதிபர் ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளார்.

அரசை கவிழ்க்கும் சதி திட்டம் அம்பலமானவுடன் ஜனாதிபதியின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்த அவரின் பாதுகாப்பு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை சென்ற வன்முறைக் காலங்களில் இரகசியமான முறையில் செயல்பட்ட ''ஒப்ஸ் கம்பயின்'' (Ops Combine) என்ற ஓர் கூட்டு அமைப்பு செயற்பட்டதாகவும், அதனை முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ன, லக்கி அல்கம ஆகியோரே செயல்படுத்தியதாகவும் இதற்கு மிக நெருக்கமாக செயல்பட்ட அரசியல் வாதி சிறிசேன கூரே, என்ற தகவல்களும் தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளதாக மேலும் அப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**ஊக்குவிப்பு**

பட்டவர்கள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்படி யாழ்ப்பாணம் - நல்லூர் பிரதிக் கோட்டப் பணிப்பாளர் திரு- சி- புலேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்-

---

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை விசுவலிங்கம்

(சமாதான நீதவான் - உரிமையாளர் குகன் மரக்காலை)

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், ஆனைப்பந்தியடியை வசிப்பிடமாகக் கொண்டவரும் குகன் மரக்காலை உரிமையாளரும் சமாதான நீதவானுமாகிய கணபதிப்பிள்ளை விசுவலிங்கம் 04-05 -94 புதன்கிழமை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நாகமுத்து தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற ஆறுமுகம், பூரணம் அவர்களின் மருமகனும், சிவக்கொழுந்துவின் அருமைக் கணவரும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து, காலஞ்சென்ற யோகம்மா, அமிர்தம், தர்மலிங்கம், நமசிவாயம், வள்ளியம்மை, சபாபதி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் பூதவுடல் 05-05-94 இன்று மாலை 4 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

435, நாவலர் றோட்,
ஆனைப்பந்தியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்
த. நடேசு (மகன்)
(8201)

### சபாரத்தினம் சபாலிங்கம்

சபாரத்தினம் சபாலிங்கம் 1 - 05 - 1994 அன்று பிரான்சில் அகாலமரணமானார். அன்னார் வேலணையைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர் ச. சபாரத்தினம் திருமதி மகேஸ்வரி சபாரத்தினம் தம்பதியின் அன்புமகனும், திருமதி தயாநிதி ( கோமதி )யின் அன்புக் கணவரும், சபாசேயோனின் தந்தையும், சபாநந்தன் (ACMA Financial Controler Retures) சபானாதன். [MBBS, DM, FRCS (Edin ), FRCS (Eng.) FICA] சபாநேசன் [M.SC. Civil Engineer] சபாஈசன் [A.A.T]

# டியூக்சந்திரா சாதுசிகாமணி

(சுதுமலை)
(ஜேர்மனியில் அகாலமரணம் அடைந்தவர்)

தோற்றம்:- 196?- 0.7 மறைவு:- 1994 3.26

அன்பின் உருவாய் அறிவின் சிகரமாய்
பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் இருப்பிடமாய்
பார் போற்ற வாழ்ந்த எங்கள் அன்பு டியூக்சந்திரா
புவியில் உன்சேவை காணப்பெறாதே
காற்றாய் கவர்ந்து சென்றான் காலனவன்
கலங்குகின்றோம் உன்னை இழந்து
நாற்பத்தொராம் நாள் அசுர வேகத்தில் சென்றாலும்
அப்பா உன் நினைவோ எம் இதயத்தில்
அன்றும் இன்றும் என்றும் அகலாத
அன்புச் சின்னமதை நிறுவி விட்டு சென்றனையே!
டியூக்சந்திரா உன் பிரிவால் துயருறும் உன்

அன்பு அம்மா, அக்காமார், அண்ணன்மார், அத்தான்மார், அண்ணிமார், மருமக்கள், பெறாமக்கள்

''பத்மினி பவனம்''
சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (8184)

# கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற, நிலைய உறுப்பினர் சபாநிரஞ்சன் அவர்களது சகோதரராகிய

## சபாரட்ணம் சபாலிங்கம்

அவர்களின் அகாலமரணச் செய்தி கேட்டு நம் தாங்கொணா துயர் அடைந்துள்ளோம். அன்னாரின் ஆத்[illegible]ந்தியடைய இறைவனைபிரார்த்திக்கின்றோம்.

தலையாழி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய
இந்து இளைஞர் மன்ற, இந்திரா
சனசமூக நிலைய உறுப்பினர்கள்
(8202)

ஜன ஐக்கிய முன்னணி வெலிகம கிளை அமைப்பாளராக செயல்பட்டவர்மீது கைக்குண்டு வீசியதாகவும் இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறையிட்டபோதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் கூறப்படுகிறது.

## யாழ். ஸ்ரீதரில்...

தினசரி மாலை 4, 6 மணி
சனி, ஞாயிறு காலை 10.30
மாலை 4, 6 மணி

## காற்றுவெளி

சனி, ஞாயிறு 2.30 மணிக்கு
ஒளிவீச்சு

(சி-9290)

தபோது அவர்களுக்கு எதுவித தகவலும் கிடைக்காதிருந்தது தெரியவந்துள்ளது. மறுநாள் 27ஆம் திகதி காலையில் அவர் அனுப்பிய செய்தி தபாலில் அவர் கையிலேயே கிடைத்தது கண்டு அதிர்ச்சியடைந்தார்.

தான் அவசர செய்தி என்பதாலேயே இவ்வாறு அனுப்பியதாகவும் ஆனால் அதிகாரிகள் செய்தியின் தன்மையை உணர்ந்து அதனை உடனடியாக சேர்க்க முற்படாது தபாலில் சேர்த்தது வேதனை தருவதாகவும் கூறினார்.

இன்றைய நிலையை உணர்ந்து இனியாவது இவ் அதிகாரிகள் பொறுப்புடன் செயற்படுவார்களா என அவர் அங்கலாய்க்கிறார்,

உ

# உபநயன அழைப்பிதழ்

நிகழும் பவ வருஷம் சித்திரை மாதம் 23ஆம் நாள் (6-5-94) வெள்ளிக்கிழமை ஏகாதசி திதியும் பூரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகம் குருகால வோரையோடு கூடிய 9 மணிக்கு மேல் 10-15 க்குள் வரும் மிதுன லக்ன சுபமுகூர்த்தத்தில்

எனது புத்திரர்கள்

## பிரம்மஸ்ரீ பிரசன்னா சர்மா
## பிரம்மஸ்ரீ பிரசாத் சர்மா

ஆகியோருக்கு பிரம்மோப தேசயக்ஞோப வீத தாரணம் செய்ய கும்பழாவளைப் பிள்ளையார் திருவருள் கூடியுள்ளது.

அன்புடன் அழைக்கின்றோம்
இங்ஙனம்
பிரம்மஸ்ரீ இ. விஸ்வேஸ்வர குருக்கள்,
கும்பழாவளை, தம்பதிகள்
அளவெட்டி. (சந்திரன்-ஜானகி) (சி-9353)

காமினி

ராகவும் இவர் பதவி வகிக்கின்றார்

இவர்பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டிருப்பதை தேர்தல் ஆணையாளர் அலுவலகம் ஏற்றுக் கொண்டதும், தேசியப்பட்டியல் மூலம் காமினி திசாநாயக்காவை பாராளுமன்றத்திற்கு நியமிக்கும் நடவடிக்கையை மேற்கொள்வார் என்று கூறப்படுகிறது.

# புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994/05/05
வியாழன் - இரவு

8.01ற்கு - சொல்லுங்கள் பார்க்கலாம்.
8.10ற்கு - உரை - உலகப் பெண்ணினம்
8 20ற்கு - உழைப்போம் உயர்வோம் "ஏழைகளின் பசு சித்திரம்''
8.30ற்கு - செய்திகள்
8.40ற்கு - புதிய தமிழ் புலிகள் என்ற அமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகள் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி.
8.50ற்கு - மலரும் மொட்டுக்கள்.

1994/05/06
வெள்ளி - காலை

7.02ற்கு - மாவீர வணக்கம்
7.15ற்கு - விடுதலை கானங்கள்
7 30ற்கு - செய்திகள்
7 35ற்கு - பத்திரிகைச் செய்திகள்
7 40ற்கு - தொடர்ந்து விடுதலை கானங்கள்

அன்புமகனும், திருமதி தயாநிதி (கோமதி)யின் அன்புக் கணவரும், சபாசேயோனின் தந்தையும், சபாநந்தன் (ACMA Financial Controler Retures) சபானாதன். [MBBS, DM, FRCS (Edin ), FRCS (Eng.) FICA] சபாநேசன் [M.SC, Civil Engineer] சபாஈசன் [A.A.T] சபாநிரஞ்சன், திருமதி கௌரி சற்குணானந்தன், திருமதி வானதி இரத்தினமோகன், திருமதி சுமதி வன்னியசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்.
திருமதி. சபாரத்தினம் மகேஸ்வரி (தாயார்)
அச்சுக்கூட ஒழுங்கை,
தலையாழி,
கொக்குவில் (8197)

## ஐந்தாம் ஆண்டு

கள் ஆரம்பிக்கப்படும் போது புதிய பாடசாலைகளில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு வசதி ஏற்படுமென்று சுட்டிக் காட்டப்படுகிறது.

## லேக்ஹவுஸ்

சுனில் றொட்றிக்கோவின் இடத்திற்கு தகவல் ஒலிபரப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரும் தற்போது மத்திய மாகாண சபை உறுப்பினருமான சரத் அமுனுகம நியமிக்கப்பட்டுள்ளார். இவர் காமினி திசாநாயக்காவின் நெருங்கிய ஆதரவாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

பத்திரிகை நிறுவனத்தின் முக்கிய அதிகாரிகள் பதவி விலகியிருப்பது டி பி விஜேதுங்கா தமது பிடியை இறுக்கி வருவதையே காட்டுகின்றது என்றும் மேலும் பல அதிகாரிகள் பதவி விலகும் சாத்தியம் இருப்பதை காட்டுகின்றது என்றும் பி பி ஸியின் கொழும்பு முகவர் ஜோர்ஜ் ஆர்னி கருத்து வெளியிட்டுள்ளார்.

## அறிவாற்றல் ஏடு



# சிட்டு

வெளிவருகிறது.
[சி-9352]

# வெகுவிரைவில்... மண்ணுக்காக

(இ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1994ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.